# இயல் -1

# ஆய்வு அறிமுகம்

## *இயல் -1*

# ஆய்வு அறிமுகம்

### *1.1 முன்னுரை :-*

இலக்கியப்படைப்பாளர்கள் காலந்தோறும் தங்கள் சூழ்நிலைகளுக்கேற்பப் பெற்றுக் கொண்ட அனுபவங்களைப் படைப்புக்கள் மூலம் வெளிப்படுத்துவர். குமரி மாவட்டப் படைப்பாளர்களில் ஒருவரான கவிஞர். தே.ப. பெருமாளின் அனுபவங்களின் வடிவங்களாக அமைந்த படைப்புக்கள் ஆய்வுக்குத் தேர்வு செய்யப் பெற்றுள்ளன.

### *1.2 ஆய்வுப் பொருள் :-*

'தே.ப. பெருமாளின் படைப்புக்கள் - ஓர் ஆய்வு' என்னும் இவ்வாய்வின்கண் தே.ப. வின் பல்துறைப் படைப்புக்கள் ஆய்வுச் செய்யப்படுகின்றன. கவிதைகள், கதைகள், நாவல்கள், நாடகங்கள், திறனாய்வுகள், வாழ்க்கை வரலாறுகள் போன்ற பல துறைகளில் தன்னை ஈடுபடுத்தியதுடன், சிறந்த பதிப்பாசிரியராகவும், தொகுப்பாசிரியராகவும் திகழ்ந்தவர் கவிஞர் தே.ப. பெருமாள். மரபிலக்கிய நோக்கில் தன்னை அதிகம் ஈடுபடுத்திப் படைப்புக்களை உருவாக்கியுள்ள இவர் கவிமணியின் வழித் தோன்றலாகத் திகழ்ந்தவர்.

## 1.3 ஆய்வுத் தலைப்புத் தேர்வு :-

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்து கவிமணியைக் குருவாக ஏற்று அவரது வழித்தோன்றலாகத் தன்னைத் தயார்படுத்திச் சமுதாயச் சீர்கேடுகளையும், பண்பாட்டையும், குமரி மாவட்டத்தின் சிறப்புக்களையும், வெளிப்படுத்தும் வகையில் அமைந்த தே.ப. பெருமாளின் படைப்புக்களையும், படைப்பாளியாகிய அவரையும் அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் நோக்கமே இவ்வாய்வுத் தலைப்புத் தேர்வுக்குக் காரணமாகும்.

## 1.4 ஆய்வின் நோக்கம் :-

20-ம் நூற்றாண்டின் இலக்கிய எழுத்தாளராகிய தே.ப. பெருமாளின் படைப்புக்களைத் திறனாய்வு செய்து மதிப்பிடுவதும் அவற்றை அறிமுகப்படுத்துவதும் ஆய்வின் நோக்கமாகும்.

கவிஞர் தே.ப. பெருமாளின் படைப்புக்கள் கலைநோக்கிலும், சமுதாய நோக்கிலும் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பது திறனாய்வு செய்யப்படுகின்றது.

தே.ப. கவிஞராக, கதை ஆசிரியராக, நாவலாசிரியராக, நாடகாசிரியராக, திறனாய்வாளராக, வாழ்க்கை வரலாற்றாசிரியராக, தொகுப்பாசிரியராக, பதிப்பாசிரியராகச் செயல்பட்டு அடைந்த வெற்றி தோல்விகளும் நிர்ணயிக்கப்படுகின்றன.

அவ்வாறு காணும் போது அப்படைப்புக்களின் அமைப்பு, நோக்கம், அவை வெளிப்படுத்தும் கருத்துக்கள் ஆகியவை சமுதாயத்தில் ஏற்படுத்திய விளைவுகளும் விளக்கிக் காட்டப்படுகின்றன.

60-க்கும் மேற்பட்ட நூற்களை எழுதியுள்ள கவிஞர். தே.ப. பெருமாளைச் சமுதாயத்திற்கு அறிமுகம் செய்வதோடு, புதுமை நோக்கில் சென்று கொண்டிருக்கின்ற இலக்கியவாதிகளுக்கிடையில் கவிஞர் தே.ப.வின் இலக்கியத் தொண்டும் வெளிப்படுத்தப்படுகின்றது.

கவிமணியின் வழித் தோன்றலாகிய கவிஞர் தே.ப. பெருமாளின் படைப்புக்களில் சிறப்பாகக் கவிதைகளில் அமைந்துள்ள கவிமணியின் தாக்கம் எடுத்துக்காட்டப்படுகிறது.

கவிஞர் தே.ப. பெருமாள் சிறுவர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிவுறுத்தும் வண்ணமாகப் படைத்துள்ள இலக்கியங்கள் மாணவர்ச் சமுதாயத்தில் எவ்வளவுக்குப் பயனுடையனவாக அமைகின்றன என்பதும் நிர்ணயிக்கப்படுகின்றது.

சுதந்திரப் போராட்டத்திலும், சுமை தூக்கும் தொழிலாளர்களின் போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்தியவர் கவிஞர் தே.ப. பெருமாள். அவருடைய இந்த ஈடுபாட்டை எந்த அளவுக்கு அவரது படைப்புக்கள் வெளிப்படுத்துகின்றன என்பதும் ஆராய்ந்து முடிவு கட்டப்படுகின்றது.

## 1.5 ஆய்வு மூலங்கள் :-

ஆய்வு மூலங்கள், முதன்மை மூலங்கள், துணைமை மூலங்கள் என இருவகைப்படும்.

### 1.5.1. முதன்மை மூலங்கள் :-

தே.ப. பெருமாளின் படைப்புக்கள் பற்றிய இவ்வாய்வில் அவர் எழுதியுள்ள கவிதைகள், கதைகள், நாவல்கள், நாடகங்கள், திறனாய்வு நூல்கள், வாழ்க்கை, வரலாற்று நூல்கள், தொகுப்பித்த நூல்கள், பதிப்பித்த நூல்கள் ஆகியவை முதன்மை மூலங்களாக அமைகின்றன.

### 1.5.2 துணைமை மூலங்கள் :-

தே.ப. வின் படைப்புக்கள் குறித்து பிறர் எழுதியுள்ள மதிப்பீடுகள், திறனாய்வு நூல்கள் முதலியவை துணை மூலங்களாக ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இலக்கிய வரலாற்று நூல்கள், இலக்கியம் பற்றிய திறனாய்வு நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், அச்சிடப்படாத ஆய்வேடுகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆகியன ஆய்வின் செம்மையாக்கத்திற்கு உறுதுணை புரிந்துள்ளன. அத்துடன் ஆய்வாளர் படைப்பாளி சார்ந்த சிலரைப் பேட்டிகண்டு திரட்டிய தகவல்களும் ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

G 33553

## 1.6 ஆய்வு எல்லை :-

கவிஞர் தே.ப. பெருமாளின் படைப்புக்களில் ஆய்வாளர் தேடிக் கண்டடைந்த நூல்கள் மட்டுமே ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 1.6.1 கவிதைகள்

1. இயற்கையின் நடனம்
2. கன்னியாகுமரி
3. குழந்தையரங்கு
4. சிறுவர் அமுது
5. தமிழ்ச்சுனை
6. நெஞ்சமலர்கள்

### 1.6.2 கதைகள் :-

1. ஆணவ அரசகுமாரி
2. சிந்திக்க வைக்கும் சிறுகதைகள்
3. சிரிப்பூட்டும் தெனாலிராமன் கதைகள்
4. சிற்பத்தின் சக்தி
5. தமிழக மன்னவர்
6. தெய்வீகத் திருக்கதைகள்

7. நாத ஓவியம்
8. நீதி பூத்த நெஞ்சம்
9. புலவர் வரலாற்றுக் கதைகள்
10. பெரிய புராணக் கதைகள் 1 - ஆம் பாகம்
11. பெரிய புராணக் கதைகள் 4 - ஆம் பாகம்
12. மறக்க முடியாத மாமன்னர் கதைகள்
13. முத்துக் கதைகள்

## 1.6.3 நாவல்கள் :-

1. இசைக் கோமகன்
2. சிற்பியின் கனவு
3. தளவாய் வேலுத்தம்பி
4. புதிய நெஞ்சம் புதிய உணர்ச்சி
5. வஞ்சி கோமகள்
6. வாழ்வில் வசந்தம்
7. வேணாட்டு வேந்தன்

## 1.6.4 நாடகங்கள் :-

1. சாந்தி முதலிய ஓரங்க நாடகங்கள்
2. சுதந்திர தீபம்
3. மன்னன் திருமகள்
4. வாசவதத்தை

### 1.6.5 திறனாய்வு நூல்கள் :-

1. இலக்கியத்தில் இன்பச்சுவை
2. கவிஞர் கண்ணதாசன் திரை இசைப்பாடல்கள் ஒரு திறனாய்வு
3. கவிமணியின் வாழ்வும் கவிதை வளமும்
4. தமிழச் சுவை இன்பம்

### 1.6.6. வாழ்க்கை வரலாற்று நூல்கள் :-

1. அறிஞர்கள் வாழ்விலே
2. ஆழ்வார்கள் வரலாற்றுக் கதைகள்
3. உலகச் சுடர் மணிகள்
4. கவிமணி
5. குமரி மாவட்டக் கவிஞர்களும் கவிதைகளும்
6. சுடர் மணிகள் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்
7. ஞானப் பெருமக்கள் வரலாற்றில் வியப்பூட்டும் நிகழ்ச்சிகள்
8. தேவார திருச்செல்வர்கள்
9. பால முருகனடிமை
10. மேதைகள் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்.

## 1.6.7 பிற இலக்கிய நூல்கள் :-

1. அறிஞர்களின் பொன்மொழிகள்
2. கவிமணி தேவிமலர்
3. பிரபஞ்சமும் அறிவியலும்.
4. பெரியோர் சொல்லமுதம்

இங்குப் பட்டியலிடப்பட்டுள்ள நூல்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## 1.7 மொழிநடை :-

ஆய்வேட்டில் இயன்றவரை தூய தமிழ்நடையே கையாளப்பட்டுள்ளது. படைப்பாளர்கள், திறனாய்வாளர்கள், ஆகியோர்களின் பெயர்கள், நூற்பெயர்கள், பாத்திரப்பெயர்கள் ஆகியவை மிகுதியும் அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன. பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தப்படும் மேற்கோள் பகுதிகள் ஆசிரியர் நடையிலேயே எடுத்தாளப்பட்டுள்ளன. சில இடங்களில் கலைச்சொற்கள் பிறமொழிச் சொற்களாயினும் அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு பின்பற்றும் தமிழ்ச்சீர்திருத்த எழுத்து முறையில் ஆய்வேடு தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.

## 1.8 ஆய்வு அணுகு முறைகள் :-

வரலாற்றின் அடிப்படையில் தே.ப. பெருமாள் ஆராயப்படுகிற காரணத்தால் வரலாற்று அணுகு முறையை (Historical Approach) ஆய்வாளர் மேற்கொண்டுள்ளார். படைப்பாளரின் படைப்புக்களைப் பல்வேறு நோக்கில் ஆராய்கின்ற பகுப்பாய்வும் (Analytical Approach) மேற்கொள்ளப்பட்டுள்ளது. படைப்பாளர் தே.ப. விடம் ஏற்பட்டுள்ள பிற படைப்பாளர்களின் தாக்கங்கள் ஆராயப்படுவதால் ஒப்பீட்டாய்வும் (Comparative Approach), பண்பாட்டுணர்வும் சமுதாயச் செய்திகளும் படைப்புக்களில் அமைந்திருக்கும் பான்மை விளக்கப்படுவதால் அழகியல் அணுகுமுறையும் (Aesthetic Approach) சமூகவியல் அணுகுமுறையும் (Socialogical Approach) பின்பற்றப்பட்டுள்ளன.

## 1.9 ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வேடு,

1. ஆய்வு அறிமுகம்
2. கவிஞர் தே.ப பெருமாளின் வாழ்க்கைக் குறிப்புகள்
3. தே.ப. பெருமாளின் கவிதைகள்
4. தே.ப. பெருமாளின் கதைகள்
5. தே.ப பெருமாளின் நாவல்கள்

6. தே.ப. பெருமாளின் நாடகங்கள்
7. தே.ப. பெருமாளின் திறனாய்வு நூல்கள்
8. தே.ப. பெருமாளின் வாழ்க்கை வரலாற்று நூல்கள்
9. தே.ப. பெருமளின் பிற இலக்கியப் பணிகள்
10. ஆய்வு முடிவுரை

எனப் பத்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. மேலும் இறுதியில் பின்னிணைப்பு, துணை நூல் பட்டியல் ஆகியவற்றுடன் ஆய்வேடு நிறைவுறுகிறது.

## 1.9.1. ஆய்வு அறிமுகம் :-

'ஆய்வு அறிமுகம்' என்னும் முதல் இயல் இவ்வாய்வேடு பற்றிய விளக்கமாக அமைகிறது. அதாவது ஆய்வுப் பொருள், ஆய்வுத் தலைப்புத் தேர்வு, ஆய்வின் நோக்கம், ஆய்வு மூலங்கள், ஆய்வு எல்லை, ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வேட்டின் அமைப்பு , பின்னிணைப்பு பற்றிய விளக்கங்களைத் தருவதாக அமைக்கப்பட்டுள்ளது.

## 1.9.2 கவிஞர் தே.ப. பெருமாளின் வாழ்க்கைக் குறிப்புகள் :-

இந்த இயலில் படைப்பிலக்கியப் பரப்பில் நாஞ்சில் நாட்டின் பங்கு, தே.ப. பெருமாளின் பிறப்பு, கல்விநிலை, குடும்பநிலை,

சமுதாயப்பணி, சுதந்திரப்போராட்டத்தில் அவர் வகித்த பங்கு ஆகியன ஆராயப்படுகின்றன. மேலும் திரைத்துறை, நாடகத்துறை, இலக்கியத்துறை, வானொலி, பத்திரிகைத்துறை, பிற அறிஞர்களுடன் கொண்ட தொடர்பு, ஆகியனவும் ஆராயப்படுவதுடன், கவிஞருக்கும், கவிஞருடைய நூற்களுக்கும் கிடைத்த அங்கீகாரங்களும், கணிக்கப்படுகின்றன. கவிஞர் தே.ப. பெருமாள் படைப்பாளியான சூழலும் அறிமுகப் படுத்தப்படுவதுடன், தே.ப. வின் நூற்களும் பட்டியலிடப்படுகின்றன.

## 1.9.3 தே.ப பெருமாளின் கவிதைகள் :-

இவ்வியலில் கவிஞனின் பண்பு, கவிதையின் பண்பு, தே.ப. பெருமாளின் கவிதைகளில் அமைந்த பாடுபொருட்கள், கவிதை நயங்கள், வடிவ அமைப்பு, உத்திகள், அவர் கவிமணியிடம் கொண்ட தொடர்பு, அதன் தாக்கம் ஆகியன ஆராயப்படுகின்றன.

## 1.9.4 தே.ப. பெருமாளின் கதைகள் :-

கதைகள் என்ற இப்பகுதியில் கதைகள் பற்றிய விளக்கங்களும், அவற்றின் வகைகளும், நோக்கமும், விரிவாக ஆராயப்படுவதுடன், தே.ப. வின் கதைகள் குறித்த மதிப்பீடுகள், கதைகள் உணர்த்தும் கருத்துக்கள், ஆகியனவும் ஆராயப்படுகின்றன. அத்துடன் தே.ப. வின் கதைகளின் வடிவமும் அமைப்பும் பொதுவாக ஆராயப்படுகின்றன.

## 1.9.5 தே.ப . பெருமாளின் நாவல்கள் :-

இவ்வியல் நாவலின் பண்புகள், வகைகள், வரலாற்று நாவலின் பண்புகள், தே.ப.வின் நாவல்களின் கதைக்களங்கள், வரலாற்று நாவல்களில் தே.ப. பெருமாள் கொண்டிருந்த அதீத ஈடுபாடு, நாவல்களின் வழி தே.ப. அவர்கள் வெளிப்படுத்தும் சமுதாய நிலைகள், ஆகியன ஆராயப்படுகின்றன. மேலும் நாவல் அமைப்பாகிய கதைப்பின்னல், மொழிநடை, வருணனை, பாத்திரப்படைப்பு, உத்திகளாகிய நனவோடை, குறியீடு, கனவு, போன்றவையும், இயைபுத்தன்மையும், தீர்வுகளைச் சுட்டும் முறையும், தே.ப. வின் நாவல்களுக்கு எத்தகைய மதிப்பினை ஏற்படுத்துகின்றன என்பதும் ஆராய்ந்து வெளிப்படுத்தப்படுகின்றது.

## 1.9.6 தே.ப. பெருமாளின் நாடகங்கள் :-

நாடகங்கள் என்ற இப்பகுதியில் நாடகம் பற்றிய விளக்கங்களும், வளர்ச்சி நிலைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலும் நாடக வகைகள், அவற்றின் நோக்கங்கள், நாடகங்களின் கதைக்கோப்புகள், நாடகத்தின் அமைப்பு, நாடகச்சுவைகள் நாடகஉத்திகள், ஆகியன கவிஞர் தே.ப. பெருமாளின் நாடகங்களில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதும் ஆயப்படுகின்றது.

### 1.9.7 தே.ப பெருமாளின் திறனாய்வு நூல்கள் :-

இலக்கியத் திறனாய்வு பற்றிய விளக்கங்களையும், அவற்றின் வகைகளையும் பற்றிக் கூறுவதுடன், அவற்றைக் கவிஞர் தே.ப. பெருமாள் தமது படைப்புக்களில் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதும் ஆய்வு செய்யப்படுகிறது. இலக்கியச் சுவைகளுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, திறனாய்வு செய்துள்ளார் என்பதும், கவிமணியின் வாழ்க்கையை எந்நோக்கில் திறனாய்வு செய்துள்ளார் என்பதும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன.

### 1.9.8 தே.ப. பெருமாளின் வாழ்க்கை வரலாற்றுநூல்கள் :-

வாழ்க்கை வரலாற்று நூல்கள் பற்றிய விளக்கங்கள், அவற்றின் பண்புகள், வகைகள், ஆகியன தெளிவாக விளக்கப்படுவதுடன், தே.ப. பெருமாள் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்களைப் படைப்பதில் எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளார் என்பதும் அவற்றின் அமைப்புமுறையும் ஆராயப்படுகின்றன.

### 1.9.9. தே.ப. பெருமாளின் பிற இலக்கியப்பணிகள் :-

கவிஞர் தே.ப. பெருமாள் ஒரு தொகுப்பாசிரியராக, பதிப்பாசிரியராக, தமது எழுத்துத்திறனை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இவ்வியல் ஆய்கிறது.

## 1.9.10. ஆய்வு முடிவுரை :-

ஆய்வு முடிவுரையில் ஆய்வில் கண்டறிந்த முடிவுகளும் உண்மைகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. தே.ப. பெருமாளின் படைப்புக்கள் குறித்து மேலாய்வு செய்வதற்கான வழிவகைகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

## பின்னிணைப்புக்கள் :-

பின்னிணைப்புக்களில் தே.ப. பிற அறிஞர்களிடம் கொண்ட தொடர்பைக் காட்டும் புகைப்படம்,

தே.ப. பெருமாளோடு தொடர்புள்ள சிலரை நேரடியாகக் கண்ட பேட்டி,

நாவல்களின் கதைச் சுருக்கங்கள் ஆகியன இடம் பெற்றுள்ளன. ஆய்விற்குப் பயன்பட்ட நூற்கள் துணை நூற்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.